**அகில இலங்கை சாசனாராக்சக சபை நிதியம் - 2016**

அகில இலங்கை சாசனாராக்சக சபை நிதியத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அகில இலங்கை சாசனாராக்சக சபை அதிகாரச் சட்டத்தின் 10 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசிலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், காணக்காய்வு செய்யப்பட்டன. அகில இலங்கை சாசனாராக்சக சபை நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் தினமளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் நிதியத்தின் மீளாய்வாண்டுச் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுபாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அகில் இலங்கை சாசனாரக்சக சபை அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய 2016 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 டிசெம்பர் 20 ஆந் திகதியளவிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 கணக்கீட்டு ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படுதல்**

நிதிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பேணப்பட்டபோதும், மீளாய்வாண்டிற்கான கணக்கீட்டு ஏடுகளும் பதிவேடுகளும் பூரணப்படுத்தப்படவில்லை.

**2.3 நிகழ்வில் உள்ள சொத்துக்களும் பொறுப்புகளும்**

நிதியம் இறுதியாகத் தயாரித்திருந்த 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், வருமானம், செலவினம் என்பன தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| **சொத்துக்கள், வருமானம் மற்றும் செலவினம்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நிலையான வைப்புகள் | 15,747,770 |
| நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நம்பிக்கைப் பொறுப்புகள் | 6,488,627 |
| சேமிப்புக் கணக்கு | 10,377,786 |
| நடைமுறைக் கணக்கு | 203,785 |
| ஒதுக்க நிதியம் | 31,276,248 |
| மொத்த வருமானம் | 13,057,766 |
| மொத்தச் செலவினம் | 11,516,045 |
| மிகை | 1,541,721 |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | V நிதிப்பிரமாணம் 395(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | வங்கிக் கணக்கைக் கொண்டிருக்கும் சகல திணைக்களங்களும் ஒவ்வொரு மாத இறுதியிலுமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஒன்றைத் தயாரிக்க வேண்டுமாயினும், நிதியம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கவில்லை. |
| (ஆ) | 2005 டிசெம்பர் 19 ஆந் திகதிய பீஈடி/33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச நிறுவனங்கள் சகலவற்றினதும் முதலீடுகள் அரச வங்கிகளில் மாத்திரம் பேணப்பட வேண்டுமாயினும், தனியார் வங்கி ஒன்றில் நெடுங்காலமாக நிறுவனம் நிலையான வைப்புக் கணக்கொன்றில் ரூபா 5,495,000 முதலீட்டை மேற்கொண்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சாசனாரக்சக நிர்வாக சபையிடம் விற்பனைக்காக வழங்கப்பட்ட கொடிகளில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் எஞ்சியவற்றைத் தவறின்றிக் கணிப்பிடும் விதிமுறை முன்னைய ஆண்டைப் போன்றே 2016 ஆம் ஆண்டிலும் இனங்காணப்படவில்லை. அதன் காரணமாக, ஆண்டின்போது சேமிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 19,185,496 ஆகும். அதில் 2016 ஆம் ஆண்டிற்குரிய விற்பனை வருமானத்தை நிச்சயித்து இனங்காண முடியவில்லை.

(ஆ) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மீளாய்வாண்டின்போது மருத்துவ உதவியாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,843,000 ஆகும். எவ்வாறாயினும், உதவி பெறும் ஆசிரியர்கள் உயிருடன் இருப்பதைத் தெரிவிக்கும் கிராம உத்தியோகத்தரது சான்றிதழ் மற்றும் உதவியைப் பெற்றுக்கொண்டதற்கான பெறுபவரிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் என்பன பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதவியணி நிர்வாகம்

நிதியத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் தொடர்பாக ஒரு பெண் உத்தியோகத்தரை மாத்திரம் ஆட்சேர்ந்திருந்தமையால் உள்ளகச் செவ்வை ஏற்படும் விதத்தில் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

அகில இலங்கை சாசனாராக்சக சபை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கம் ஈடேற்றப்படும் விதத்தில் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 133(ஆ) நிதிப் பிரமாணத்தின் பிரகாரமும் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரமும் நிதிய நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

### 4.3 வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அகில இலங்கை சாசனாராக்சக சபை நிதிய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையானது வருடாந்த அறிக்கையைத் தயாரித்து புத்தசாசன அமைச்சின் செயலாளருக்கும் தொண்டர் சமூக சேவைகள் நிறுவனப் பதிவாளருக்கும் அவற்றை சமர்ப்பிக்க வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்படவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) பேரேட்டுக் கணக்குகள் தெளிவாக, பிழையின்றி, முறைப்படி பேணப்படாமை |
| | (ii) நடைமுறைக் கணக்கு மூலமான செலவினம் தொடர்பான காசேடும் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளும் முறையாகத் தயாரிக்கப்படவில்லை. |
| | (iii) பெற்ற வருமானத்திற்கு பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை. |
| | (iv) காசேடு குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிராமை. |
| (ஆ) திட்டமிடல் | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை எய்தும் விதத்தில் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |
| (இ) லேபல்களை அச்சிடலும் விற்பனை செய்தலும் | அச்சிடப்படும் லேபல்களுக்குத் தொடர் இலக்கங்கள் இடப்படாமை, விற்பனை செய்யப்படாது எஞ்சியவற்றைத் திருப்பிப் பெறுதல், அறிக்கையிடல், பெற்ற மற்றும் பெற வேண்டிய வருமானத்தைப் பிழையின்றி கணிப்பிடுதலுக்கான விதிமுறை இல்லாமை. |